ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

# மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

02.10.2023

## தலைப்புச்செய்திகள்

1. தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் 154-வது பிறந்தநாளையொட்டி ராஜ்காட்டில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று மலரஞ்சலி செலுத்தினார்.

2. கிராமசபை கூட்டங்களில் ஊராட்சிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான கருத்துக்களை பொதுமக்கள் தெரிவிக்கலாம் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

3. போலி பட்டுப்புடவைகள் விற்பவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு. காந்தி தெரிவித்துள்ளார்.

4. கோவை, நீலகிரி, தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமையம் அறிவித்துள்ளது.

5. ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா இன்று மூன்று வெண்கல பதக்கங்களை வென்றுள்ளது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□

### காந்தி ஜெயந்தி

தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் 154-வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி புதுதில்லி ராஜ்காட்டில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் குடியரசுதலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு.நரேந்திரமோடி, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

சர்வமத பிரார்த்தனைகளும் அங்கு நடைபெற்றது.

சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள அண்ணல் காந்தியடிகளின் திருவுருவ சிலைக்கு கீழ் வைக்கப்பட்டுள்ள திருவுருவ படத்திற்கு

ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மாநில அமைச்சர்கள் உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

அனைத்து மாவட்டங்களிலும், அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தலைமையில் காந்தி ஜெயந்தி விழா சிறப்பாக நடைபெறுகிறது

□□□□□□□

தூய்மை இயக்கம்

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நாடுமுழுவதும் தூய்மையை இயக்கத்தை வலுப்படுத்தும் வகையில் சிறப்பு தூய்மை பிரச்சாரம் இன்று தொடங்கி வரும் 31-ம் தேதிவரை நடைபெறுகிறது.

ஏற்கனவே 2 கட்டங்களாக நடைபெற்ற தூய்மை இயக்கத்தின் மூலம் குப்பைகளை அகற்றியதன் வாயிலாக 370 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

□□□□□□□

கிராமசபை கூட்டங்கள்

கிராமசபை கூட்டங்களில் ஊராட்சிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான கருத்துக்களை பொதுமக்கள் தெரிவிக்கலாம் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

காந்திஜெயந்தியை ஒட்டி தமிழகத்தில் 12 ஆயிரத்து 525 இடங்களில் சிறப்பு கிராமசபை கூட்டங்களை காணொலி வாயிலாக தொடங்கி வைத்து பேசிய முதலமைச்சர், நீராதாரங்களை மேம்படுத்துதல், திட திரவ கழிவு மேலாண்மை உள்ளிட்டவைகளை மேற்கொள்ள மக்கள் அனைவரும் உறுதியேற்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

விருதுநகர் மாவட்டம் தோனுகால் கிராமத்தில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் பேசிய மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைஉறுதித்திட்ட பயனாளிகளுக்கு ஊதியம் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

சென்னம்பட்டி கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இத்திட்டத்தின் மூலம் தோனுகால் கண்மாய்க்கு தடையின்றி நீர்வரத்து கிடைக்கப்பெறும் என்றார்.

திருச்சி சிறுகனூர் பஞ்சாயத்து அலுவலகத்தில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் ஆட்சித்தலைவர் திரு. மா.பிரதீப்குமார் கலந்துகொண்டார்.

பெரம்பலூர் மாவட்டம் குளத்தூர் ஊராட்சியில் ஆட்சியர் திருமதி. கற்பகம் முன்னிலையில் கிராமசபை கூட்டம் நடைபெற்றது.

□□□□□□□

கதர் விற்பனை

காந்தி ஜெயந்தியை ஒட்டி தீபாவளி சிறப்பு கதர் விற்பனை இன்று தொடங்கியது.

சேலம் கதர் அங்காடியில் கடந்த 3 மாதங்களில் ஆன்லைன் விற்பனை மூலம் ஒன்றரை கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக மாநில கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. காந்தி தெரிவித்துள்ளார்.

சேலத்தில் 2 கோடியே 40 லட்சரூபாய் மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தை இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், போலி பட்டுப்புடவைகள் விற்பவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

உதகை மலைவாழ் மக்களுக்கு தோடாவகை துணிகள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்படுவதாக கூறினார்.

□□□□□□□

கீதாஜீவன் - கதர்

கதர் பொருட்களை வாங்குவதன் மூலம் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்ய முடியுமென்று மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி காதி விற்பனை அங்காடியில் தீபாவளி சிறப்பு விற்பனையை தொடங்கி வைத்தஅவர், இம்மாவட்டத்தில் நடப்பாண்டு 60 லட்சம் ரூபாய் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

.... வாய்ஸ் ....

□□□□□□□

வானதி ஸ்ரீனிவாசன் - கதர்

தமிழ்நாட்டில் கடந்த 9 ஆண்டுகளில் காதி விற்பனை அதிகரித்துள்ளதாக பி.ஜே.பி. தேசிய மகளிர் அணி தலைவர் திருமதி. வானதி ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

கோவை டவுன்ஹால் கதர் அங்காடியில் சிறப்பு விற்பனையை தொடங்கிவைத்து பேசியஅவர், உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் என்ற பிரதமரின் வேண்டுகோளுக்கு இணங்க பொதுமக்கள் கதர் பொருட்களை அதிகளவில் பயன்படுத்த முன்வரவேண்டும் என்றார்.

.... வாய்ஸ் .....

பீளமேட்டில் நாளை நடைபெறும் தூய்மை பாரத நிகழ்ச்சியில் மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கலந்துகொள்ள உள்ளதாகவும், 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான மத்திய அரசு கடனுதவிகளை பயனாளிகளுக்கு அமைச்சர் வழங்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

□□□□□□□□

கதர் விற்பனை – மாவட்டம்

கரூர் மாவட்டம் தான்தோணிமலையில் சிறப்பு கதர் விற்பனையை தொடங்கிவைத்த ஆட்சித்தலைவர் டாக்டர் பிரபுசங்கர், 1 கோடியே 95 லட்சரூபாய் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் காதி விற்பனையை தொடங்கிவைத்த ஆட்சித்தலைவர் திரு. ஆல்பி ஜான் வர்கீஸ் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த கதர் பொருட்களை பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

திருச்சி மாவட்டத்தில் காந்திஜெயந்தியை ஒட்டி தீபாவளி சிறப்பு கதர் விற்பனையை ஆட்சித்தலைவர் திரு. மா.பிரதீப்குமார் இன்று தொடங்கி வைத்தார்.

இந்த ஆண்டு விற்பனை இலக்காக 3 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தர்மபுரி காதிபவனில் தீபாவளி சிறப்பு விற்பனையை ஆட்சித்தலைவர் திருமதி. சாந்தி இன்று தொடங்கி வைத்தார்.

நடப்பாண்டு விற்பனை இலக்காக 90 லட்சரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

□□□□□□□□

லால்பகதூர் சாஸ்திரி

முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் 119-வது பிறந்த தினமும் இன்று கொண்டாடப்படுகிறது.

புதுதில்லி விஜயகட்டில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் குடியரசுதலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

□□□□□□□

காமராஜர் நினைவுநாள்

பெருந்தலைவர் காமராஜரின் 49-வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு மாநில அமைச்சர் திரு. சேகர்பாபு உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

□□□□□□□

பிரதமர்

நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் சித்தோர்கரில் 7 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பேசியஅவர், எல்லையோர கிராமங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசு அதிமுக்கியத்துவம் அளித்து வருவதாக கூறினார்.

தொடர்ந்து மத்திய பிரதேச மாநிலம் குவாலியரில் 19 ஆயிரத்து 260 கோடிரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதோடு, 11 ஆயிரத்து 895 கோடிரூபாய் மதிப்பிலான டெல்லி – வதோதரா விரைவுச்சாலையை நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

□□□□□□□

விருதுகள்

தமிழ்நாட்டில் ஏழரை சதவீத ஒதுக்கீட்டின்கீழ் பயிலும் முதுநிலை பொறியியல் மாணாக்கருக்கு சாதனை விஞ்ஞானிகள் என்ற பெயரில் கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சாதனை படைத்த தமிழ்நாட்டைச் சேர்ந்த விண்வெளி விஞ்ஞானிகள் 9 பேருக்கு அரசு சார்பில் விருது வழங்கி பேசிய அவர், பொறியியல் மாணாக்கரின் விஞ்ஞான ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் சாதனை விஞ்ஞானி உதவித்தொகை வழங்கப்பட உள்ளதாக கூறினார்.

□□□□□□□

எடப்பாடி கே. பழனிச்சாமி

தமிழக அரசு, போக்குவரத்துக் கழகங்களில் தனியார் நிறுவனங்கள் மூலம் ஓட்டுநர், நடத்துனர்களை தேர்வுசெய்யும் முறை கண்டனத்திற்கு உரியது என்று அஇஅதிமுக பொதுசெயலளார் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதன்மூலம் போக்குவரத்துக்கழக ஊழியர்களின் உரிமைகள் பாதிக்கப்படும் என்றும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய பணி நியமனம் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

□□□□□□□

தர்மபுரி வாய்ஸ்

தர்மபுரி மாவட்டம் உதயமான தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

... வாய்ஸ் ...

□□□□□□□

இருவரி

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமப்புற பகுதிகளில் நிலவும் உகந்த சூழல் காரணமாக ஸ்ட்ராபெரி விளைச்சல் அதிகரித்துள்ளதையடுத்து விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

□□□□□□□

மேட்டூர்

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு இன்று வினாடிக்கு 3ஆயிரத்து 122 கனஅடியாக குறைந்துள்ளது.

அணிலிருந்து டெல்டா பாசனத்திற்காக 6 ஆயிரத்து 500 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 4 ஆயிரம் கனஅடியாக குறைந்துள்ளது.

□□□□□□□□

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்து வரும் மழைக்காரணமாக முல்லை பெரியாறு அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது.

அணைக்கு வரும் நீரின் அளவு இன்று வினாடிக்கு 2 ஆயிரத்து 593 கனஅடியாக உள்ளது.

அணையிலிருந்து விநாக்கு 933 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது.

□□□□□□□□

வானிலை

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக கோவை, நெல்லை மாவட்டங்களின் மலைப்பகுதிகள்,

நீலகிரி, தேனி, திண்டுக்கல், கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு, மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் இலங்கை கடலோர பகுதிகளில் 45 கிலோ மீட்டர் வேகம் வரை சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

□□□□□□□□

ஆசிய விளையாட்டு போட்டிகள்

சீன ஹாங்ஸூவில் நடைபெறும் ஆசிய விளையாட்டு போட்டிகளில் 3 வெண்கல பதக்கங்களை வென்றுள்ளது.

மகளிர் இரட்டையர் டேபிள் டென்னிஸ் ஆட்டத்தில் முதன்முறையாக இந்தியாவின் ஐஹிகா முகர்ஜி, சுதிர்த்தா முகர்ஜி இணை வெண்கல பதக்கத்தை வென்றுள்ளது.

ஆடவர் மற்றும் மகளிர்பிரிவு ஸ்கேட்டிங்கில் இன்று 2 வெண்கல பதக்கங்களை இந்திய வீரர்கள் கைப்பற்றியுள்ளனர்.

மகளிர் கபடி போட்டியில் இந்தியா – சீன தைபேயையும்,

ஆடவர் ஹாக்கி போட்டியில் இந்திய அணி பங்களாதேஷையும் எதிர்கொள்கிறது.

பதங்கங்களை வென்ற வீர வீராங்கனைகளுக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. அனுராக்சிங் தாகூர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்தியா இதுவரை 13 தங்கம், 21 வெள்ளி 22 வெண்கலம் உட்பட 56 பதக்கங்களுடன் பதக்க பட்டியலில் 4 ஆவது இடத்தில் உள்ளது.

□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது